ஸ்ரீ:


# ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ ரத்னமாலா ஸ்தோத்திரம்



"ஞானாநந்த மயம் தேவம் நிர்மலஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே"

ஸ்ரீ

# ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ ரத்னமாலா ஸ்தோத்திரம்




ஸ்ரீ லக்ஷ்மிஸரஸ் மாருதி

Published By :

**Sri Lakshmi Saras Maruthi Trust**


**Ramakrishna Nagar, Pondicherry.**

**Free Distribution**



ஸ்ரீமத்பரம... அபிநவரங்கநாத ப்ரம்ஹதந்த்ரபரகால மஹாதேசிகன்
(மைசூர்)

**ஸ்ரீ ஹயக்ரீவரத்னமாலா ஸ்தோத்திரத்தை**
**அருளிச்செய்த மஹான்**



**கோடி கன்னிகாதானம் திருக்குடந்தை**
**ஸ்ரீ ஸுந்தரதாதயார்ய மஹா தேசிகன்**

## முன்னுரை

1971ம் வருடம் ஆனி அனுஷம் (5-7-1971) சிம்ம லக்னம் கூடிய சுபயோக சுபதினத்தில் புதுவை ஸ்ரீ ராமகிருஷ்ணா நகரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன் ஸன்னிதி மஹா ஸம்ப்ரோக்ஷணம் நிறைவேறியது. எம்பெருமானின் திவ்ய கடாக்ஷ வைபவத்தால் புதுச்சேரி மஹா ஜனங்களுக்கு மட்டுமல்லாது நம் பாரத பிரதேச மக்கள் அனைவருக்குமே அருள்பாலித்து வருகிறார். ஒரே ஸன்னிதியில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவன், ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மன், ஸ்ரீலக்ஷ்மி வராஹன் மூவரும் எழுந்தருளியிருப்பதும் ஸ்ரீ சுதர்சனர் ஆழ்வார் ஆசாரியர்கள் யாவரும் எழுந்தருளியிருந்து அபார அனுக்ரஹங்களைச் செய்து வருகின்றனர். கோயில் நிர்மாணமாகி இந்த வருஷம் சுபானு ஆனி அனுஷம் (10-7-2003) கூடிய சுபதினத்தில் 32 வருஷங்கள் பூர்த்தியாகின்றன.

இதை சிறப்பாகக் கொண்டாட ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவனைப் பற்றிய அரிதான ஒரு திவ்ய ஸூக்தி வெளியிடப் பெறுவது பொருத்தமாக இருக்கின்றது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரம் யாவரும் அறிவர். மைசூர் பரகால மடத்தில் 33வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்ரீரங்கநாத மஹா தேசிக பரகால ஜீயர் அவர்கள் இதிலுள்ள ஸ்ரீ ஹயக்ரீவ ரத்னமாலா ஸ்தோத்திரத்தை அருளிச்செய்தவர். ஸ்ரீ ஹயசிரோ உபாக்யான வியாக்யானமாக அவர் அருளிச்செய்த ஸ்ரீ ஹயசிரோ ரத்ன பூஷணத்தின் ஸாரமாக ஸ்வாமி இந்த 32 சுலோகங்களை அருளிச் செய்துள்ளார். ஸ்ரீ ஹயக்ரீவனைப்பற்றிய பிரமாணங்கள் ரிக், யஜுஸ், அதர்வண வேதங்களில் கிடைப்பவையும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் கிடைப்பவையுமாகிய பிரமாணங்களைக் கொண்டு ஸ்ரீஹயக்ரீவனும், அவர் மடியில் அமர்ந்துள்ள வாக்தேவியாகிய மஹாலக்ஷ்மியும் எவ்வாறு ஐஹிக, ஆமுஷ்மிக மோக்ஷபர்யந்தமான பலன்களைத் தமது தாஸர்களுக்கு வழங்குகின்றனர், அவர்தம் கருணைப் பெருக்கின் திறம் என்னவென்பதை இந்த அரிய ஸ்தோத்திர ரத்தினம் கூறுகிறது. கல்வியயிலும் மாணவர்களும், உத்தியோகம் பார்க்கும் மஹனீயர்களும், கிரகஸ்தர்களும் முமுக்ஷுக்களும் யாவரும் ஒருங்கே அபரிமிதமான பயன்களை கடுக சித்திக்கப்பெறுவர்.

இந்த அரிய ஸ்தோத்திரத்திற்கு தமிழ் பொழிப்புரை தந்தருளிய ஸ்ரீ உ.வே மஹாமஹோபாத்யாய, பையம்பாடி ஸ்ரீவத்ஸாங்காச்சார்ய ஸ்வாமியுடைய எளிமையான ஸ்வபாவத்திற்கு நன்றி கூறுவதா ?

அன்னாரின் வாசாமகோசரமான, மஹத்தான பொருள் பொதிந்த ச்லோகங்களுக்கு அல்பச்ருதர்களும் புரிந்து கொள்ளும் நடையில் பொழிப்புரை வழங்கியதற்கு விஸ்மயப்பட்டு நிற்பதா? அடியேனின் பிரார்த்தனைக்குத் தயங்காது செவி மடுத்து, அடியேனை ஒரு பொருட்டாக மதித்து பொழிப்புரையும் எழுதி அச்சுப்பிழைகளையும் வலிய முன்வந்து திருத்தியருளி புத்தகம் வெளிவர காரணகர்த்தாவாக இருந்ததற்கு எவ்விதம் நன்றி பாராட்டுவது என்று புரியவில்லை. ஓம் ஸ்ரீ ரமணா பிரிண்டர்ஸ் குறுகிய காலத்தில் தாமே சொந்த அக்கரை எடுத்துக்கொண்டு புத்தகத்தை வெளியிட்டுத்தந்ததற்கும் அளப்பரிய நன்றி பாராட்டுகிறேன்.

**R.S. CHARI**

ஸ்ரீ:

ஸ்ரீமத் மஹாபாரதம் சாந்தி பர்வாவில் இருக்கும்

ஹயசிர உபாக்யானத்தின் வியாக்யானமாகிய

ஹயசிரோ பூஷணம் விவரித்துக்கூறும்

ச்ருதி ஸ்ம்ருதிகளின் அர்த்தம் ச்லோகங்களாக ஸ்ரீப்ரஹ்மதந்த்ர

ஸ்வதந்த்ர பரகால மடத்தின் 33-வது பட்டம் ஜீயர் அருளிச்செய்த

## ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ ரத்னமாலா ஸ்தோத்திரம்.

வாகீசாக்யா ஸ்ருதி ஸ்ம்ருத்யுதித சுபதனோர் வாஸுதேவஸ்ய மூர்த்தி :
ஜ்ஞாதா யத்வாகுபஜ்ஞம் புவி மனுஜவரைர் வாஜிவக்த்ர ப்ரஸாதாத்|
ப்ரக்யாதாச்சர்ய சக்தி : கவிகதகஹரி : ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர :
த்ரய்யந்தாசார்ய நாமா மம ஹ்ருதி ஸததம் தேசிகேந்த்ர : ஸ இந்தாம்|| 1

ஸத்த்வஸ்த்தம் நாபி பத்மே விதி மத திதிஜம் ராஜஸம் தாமஸம் சாபி
அப்பிந்த்வோருத்பாத்ய தாப்யாம் அபஹ்ருத மகிலம் வேதமாதாய தாத்ரே|
தத்த்வா த்ராக் தெள ச ஹத்வா வரகணமதிசத் வேதஸே ஸ்த்ர ஆதெள
தந்த்ரம் சோபாதிசத் யஸ்ஸ மம ஹயசிரா மானஸே ஸன்னிதத்தாம்|| 2

அத்யாஸ்தேங்கம் பரா வாக் வர ஹயசிரஸோ பர்த்துர் ஆசார்யகே யா
வாஞ்சாவாந் ஐதரேயோபநிஷதி சரமாத் ப்ராக்தனே கண்ட ஆதெள|
யஸ்யா வீணாம் ச தைவீம் மனஸி விநிததத் க்யாதிம் ஏதி அத்யந்த்யமந்த்ரே
ஸேசானா ஸர்வவாசோ மம ஹ்ருதயகதா சாரு மாம் வாதயேத் வாக்|| 3

க்ருஷ்ணம் விப்ரா யமேகம் விதுரபி பஹுதா வேதயோர் ஆதிமாந்தே
ஸ்ரஷ்டா விஸ்ரம்ஸமான:ஸ்வமத ஸமததாத் சந்தஸாம் யேன தானாத்|
க்ருஷ்ணம் விஷ்ணும் ச ஜிஷ்ணும் கலயிதுரபி யஸ்ஸம்ஹிதாம் ஆயுருக்தம்
வாக்ச்லிஷ்டம் ப்ராணமேனம் ஹயமுகம் அனுஸந்தத்மஹே கிம் வ்ருதான்யை:|| 4

பிரக்யாதா யாச்வலாயன்யதிகபல தசச்லோக்யபிக்யா ததந்த:
ச்ருத்யுக்தா வாக் ஸரஸ்வத்யபி ஹயமுக தே சக்திரன்யா ந யுக்தா|
பூர்ணா த்வத் சக்திரர்த்தம் பவதி விதிவதூர்யா நதீ ஸா கலாஸ்யா:
இத்யுக்தே பிரம்ம வைவர்த்த இஹ ஸமுதிதா ஸ்யாத் பரா நிம்னகான்யா|| 5

ஶ்ரீஹர்ஷோ விஷ்ணு பத்னீம் வததி கவிரிமாம் நைஷதே மல்லிநாத :
க்யாதாமேதாம் புராணே ஹயமுக புவி ச ஸ்தாபிதாம் விஷ்ணு பார்ச்வே।
தீ வாக்மித்வார்த்த ஜப்யம் தினமுக ஸமயே சௌனக : ஸூக்தமஸ்யா:
ஶ்ரீயுக்தம் பஹ்வ்ருசஸ்ஸ ஸ்ம்ருதிக்ருதபி ததா சிந்தனீயம் ததைனாம்॥ 6

வாகாம்ப்ருண்யாதி ஸூக்தே நிரவதி மஹிமா யா ச்ருதா வாக் ச தேவீ
பூர்வே ஸூக்தேபி ஹம்ஸஸ்த்வம் அதிக மஹிமா விச்ருதோ பஹ்வ்ருசைர்ய :।
யுக்தா வாரண்யகே தௌ கதிதப ஹூ குணௌ ஸாமநீ ஸம்ஹிதேத்யபி
ஆராத்யோ வ்யூஹருபீ ஹயமுக விதிதோ ஜ்ஞானினாம் கர்மபிஸ்த்வம்॥ 7

இந்த்ரோ வ்ருத்ரம் ஹனிஷ்யந் ஸகிவர விதரம் விக்ரமஸ்வேதி விஷ்ணும்
ஸம்ப்ரார்த்யாதோ ஹதாரிஸ்தத உபஜனித ப்ரம்ஹத்யாப நுத்த்யை।
ஸூக்தாப்யாம் ஆஹூதிம் யம் ப்ரதி பரமஜூஹோந் மூர்த்த்னி கந்தர்வ ஏகோ
தேவானாம் நாமதாரீ ஸ மம த்ருடமதாவத்ய வாசஸ்பதி : ஸ்தாத்॥ 8

வேதே ச அதர்வணாக்யே ப்ரதமத உதிதம் யத் த்ரிஷப்தீய ஸூக்தம்
தந்மேதா ஜன்மகர்மாங்கமிதி நிகதிதம் கௌசிகேன ஸ்வஸூத்ரே।
மேதாகாம : புமாந் யஸ்துரகமுக தத : ஸர்வ லோகாதி நாதம்
த்யாயேத் வாசஸ்பதிம் த்வாம் ப்ரபவதி ஸகல ஸ்தத்ச்ருதார்த்தோ Zப்ரகம்ப்ய:॥ 9

நாஸன்னோஸத் ததானீ மபிது கமலயா Zவாதமேகம் ததானீத்
தஸ்மாத் தன்யத் பரம் கிஞ்சிதபி ந தமஸா கூடமக்ரே ப்ரகேதம்।
அத்தா கோ வேத ஹேதும் த்விவிதமவிகுணம் வாஸூதேவாபிதானம்
வ்யூஹம் த்வாம் ப்ராதுரர்ச்யம் ஹயமுக பகமாஹூ : க்ரமாத் தைத்திரீயா :॥ 10

ப்ராத: பூஜ்யம் பகாக்யம் ப்ரதமமகதயந் பஹ்வ்ருசா: பஞ்சமே Zதோ
நாஸத் ஸூக்தேஷ்டமே ப்ராக்வதபி ஸமவதந் தைத்திரீய க்ரமாத் த்வாம்।
பாராசர்யோ Zவதீர்ணம் வததி ஹயமுகாதர்வண : கௌசிகஸ்த்வாம்
மேதார்த்தம் ப்ராதரர்ச்யம் பகமனுமனுதே ஸம்ஹிதாப்யாஹ ஸாது॥ 11.

ப்ரத்யும்னாந்தம் த்ரிபாத் பாஸ்வர வபுரம்ருதம் வாஸூதேவாதிப்ருந்தே
பாதஸ்தத்ரா நிருத்தோ புவி தத உதபூ தாத்மபூ ரிக்விதிஜ்ஞா :।
ஹூத்வா த்வாம் யஜ்ஞரூபம் ஹயவதன ஜிதந்தே ஸ்துதிம் தந்வதேZத :
நிர்ணீதம் ஸர்வவேதேஷ் வனுபமமிதி தத் பௌருஷம் ஸூக்தமாப்தை :॥ 12



ஸர்வே வேதா ப்ரஜாஸ்ச ப்ரசுர பஹூபிதா : ஸம்ச்ரயந்தே யமேகம்
சாஸ்தா யோZந்த : ப்ரவிஷ்டஸ்த்வயமபி தசதாத்மா சரத்யர்ணவே யம்।
ப்ரஹ்மா ச ஏகோன்வவிந்தத் ஹரிமிஹ தசஹோதாரம் அந்தஸ்ச சந்த்ரே
தேவாஸ்ஸந்தம் ஸஹைனம் நஹி விதுரவதாத் ஸோத்ய வாசஸ்பதிர்மாம்॥ 13

யஸ்மாத் ப்ரஹ்மா ச ருத்ர : ஸகல ஜகதிதம் ஜாயதே அந்தர்பஹிர்யத்
வ்யாப்த்யா ஸத்தாம் ச யஸ்மிந் லயமபி லபதே ய : சதுர்வேத மூர்த்தி:।
விஷ்ணுர் நாராயணோZ ஷ்டாக்ஷரபதவிதிதோ தேவகீ புத்ர ஏகோ
யோZதர்வாங்கே மதோ : ஸூதன உபநிஷதி ஜ்ஞாயதே மே ஸ இந்தாம்॥ 14

சக்தி : ஸ்வாபாவிகீ ஸாத்ர ச விவிதபரா ச்ரூயதே ஜ்ஞானமேவம்
த்ரேதா தத்ர க்ரியேத்தம் பலமபி ததஸௌ வாஸூதேவ : ஸ ஹம்ஸ :।
யோ ப்ரஹ்மாணம் விதாய ப்ரதமமத பராந் ப்ராஹிணோத் ஸர்வவேதாந்
தஸ்மை தேவம் ப்ரபத்யே சரணமஹமிமம் ச அமிருதஸ்யைஷ ஸேது:॥ 15

வம்ர்யோ விஷ்ணோர் தனுர்ஜ்யாம் ஹயவதன வரான் நேச்சயா சிச்சிதுஸ்தத்
கோட்யா சின்னம் ச விஷ்ணோ: சிர இதி கதிதம் யத்: ப்ரவர்க்யார்த்தவாதே।
தத்சீர்ஷம் யாஜமானம் ச்ருதி முகத இதம் ஸ்தாபிதம் யுக்திதோபி
பிராதுர்பாவ : ஸ கௌணோ பஹூமுக ஹரிவம்சாதி நிர்தாரிதோ வா॥ 16

சுக்லம் வேதம் விவஸ்வானுபதிசஸி பரம் யாஜ்ஞவல்க்யாய வாஜீ
வேதைகார்த்தை : வசோபிர்மிதம் இதம் அகிலாம்னாயதீகாரிணீம் யாம்।
வாக்தேவீம் மோக்ஷதர்மே கதயதி முனிராட் தத்க்ருபாலப்தபூமா
த்வத் சக்தி:ஸேத்யகம்ப்யம் ஹயமுக கதிதம் ப்ரம்ஹவைர்த்த வாக்பி :॥ 17

தஸ்மாத் வேதேபி தத்ரோபநிஷதி ப்ரஹதாரண்யகே காண்ட ஆத்மா
த்வம் வாக்தேவ்யா ஸஹாதௌ ஜனயஸி மிதுனீபூய ஸர்வாம்ஸ்ச வேதாந்।
தாதாரம் தஸ்ய பத்னீம் ததனு ததுபயத்வாரிகாம் வ்யஷ்டி ஸ்ருஷ்டிம்
தத் யஜ்ஞாராதிதோZஸ்மை ஹயவதன வரான் யச்சஸீதி ப்ரதீம :॥ 18

துர்யேZத்யாயே த்விதீயம் துரகமுக சிசுப்ராஹ்மணம் வ்யூஹரூபம்
ப்ராணம் ஸ்தூணாம் சிசும் த்வாம் சமஸமபி சிரோZர்வாக்பிலம் ச ஊர்த்வ புத்னம்।
ஸப்தானாம் தேவதானாம் அதிகரணமமித்ரேந்த்ரியாணாம் ஜயார்த்தம்
வாசாஷ்டம்யா யுதம் த்வாம் பரிகலயதி தத் ப்ரஹ்ம பக்தார்த்திஹாரி॥ 19

தத்யங் ஆதர்வணோச்வி திரிதசக்ருத சிரோதாரணாத் அச்வமூர்த்னா
தாப்யாம் ப்ராவர்க்ய தத்த்வம் ஹயமுக ஸமுபாதிக்ஷதேதத் யதார்த்தம்।
ஏதாவத்யேவ தத்த்வே கலிபலவசத : தாமஸா: சக்த்யதீனம்
பாவத்கம் சீர்ஷமாஹுர் புவி ஜனிஸமயே த்வத் கடாக்ஷாதிதூரா:॥ 20

தத்யங் ஆதர்வணோ யோ ஹயமுக ப்ரஹ்தாரண்யகே காண்ட ஆதௌ
ஆஹ ப்ராவர்க்ய தத்த்வம் யதபி சதபதே தீக்ஷணீயார்த்தவாதே।
விஷ்ண்வாக்யம் தத்த்வ முக்தம் புனருபநிஷதி ப்ரஹ்ம வாகீசரூபம்
யச்ச ப்ரோக்தம் த்ருதீயே ததபி ச ஸ மதுப்ராஹ்மணே வக்தி துர்யே॥ 21

வாசா தேவ்யா Zநிருத்தேன ச ஸ்ருஜதி ஜகத் ஸர்வமித்யக்ர உக்தோ
வாஹாஸ்யோ வாஸுதேவ : ஸ பர இதி மதுப்ராஹ்மணம் ஸ்தாபயித்வா।
தத்யங் ஆத்ரவணோச்வி த்ரிதச ஹித மதுத்வாஷ்ட்ர கக்ஷ்யோபதேஷ்டா
தத்த்வம் ஜானாதி சேத்யப்யகில சுபதநும் வக்தி வாகீச்வரம் த்வாம்॥ 22

தத்யங் ஆதர்வணோஸா வுபதிசதி மதுப்ராஹ்மணம் த்வாஷ்ட்ரகக்ஷ்யம்
யத் தந் நாராயணாக்யம் கவசமிதி ஸமாகுஷ்யதே ஸாத்த்விகாக்ர்யை :।
விருத்ரஸ்யேதம் வதாயாலமிதி ஹயமுக ப்ரஹ்மவித்யேதி தத்த்வம்
வாகீசைதே ந ஜானாதி அனக தவ க்ருபா பாஹ்யதாம் யே ப்ரயாதா :॥ 23

தத்த்வம் நாராயணாக்யோபநிஷதி கதிதம் பஞ்சராத்ரோக்த்த ரீத்யா
தந்நாமாக்யான ஆஹாச்வமுக விசதமாத்யம் ச தர்மம் முனீந்த்ர :।
கீதாயாம் ஸங்க்ருஹீதம் விசதயிதுமனா: க்ருஷ்ண வாஹானனைக்யம்
ப்ருதே வேதோதிதத்வம் ஸ்திரயதி ச ததத்ரோக்த ஏகாந்தி தர்மே॥ 24

ஆதௌ நாராயணம் தம் வததி மதுஜிதம் தேவகீ புத்ரமந்தே
வேதாந்தோ, மோக்ஷதர்மே வரஹயசிரஸம் ப்ராஹ க்ருஷ்ண: ஸ்வமேவ।
இதி ஆலோச்யைவ யோகீ கலி ஜிதபிஜகௌ தத்க்ரமாத் ஸ்தௌதி மத்யே
வாஹாஸ்ய த்வாம் சடாரிர் முனிரபி மனுதேZச்வம் புர : க்ருஷ்ணமந்தே॥ 25

ஜன்மாதீனாம் நிதானம் கதிசித் அகதயந் தேவமேகம் ததான்யே
தேவீமேகாம் விது : தந்மிதுனமவிகலம் ப்ரஹ்ம வேதாந்த வேத்யம்।
இத்யேவம் ஸ்தாபயித்வா சிதசிதவியுதம் ஸ்ரீமதேகம் ததித்யபி
ஆசக்யௌ மோக்ஷதர்மே ஹயமுக ஜனிவ்ருத்தாபதேசாந் முனீந்த்ர :॥ 26



ச்ராவண்யாம் தே அவதாரே ஹயமுக நிகமோத்தாரணார்த்தத்வபுத்தே:
ரிக்வேதோபக்ரம : தத்ச்ரவணப இதி நிஸ்சின்வதே பஹ்வ்ருசாக்ர்யா:।
ப்ராரம்ப : பௌர்ணமாஸ்யாம் யஜுஷ இதி பரே யாஜுஷா : ஸங்கிரந்தே
தத் வேதோபக்ரமாந்தே புவி விதிவசகாஸ்த்வாம் ஸமாராதயந்தி॥ 27

விஷ்ணோ : பத்னீ பரா வாகிதி பஹுமனுதே பாரதீ யாம் யதீச :
பத்யு : ப்ராக் பஞ்சராத்ரம் ச்ருதிமபி ஸமுபாதிக்ஷ தித்யாதரேண।
தத்வாகாச்லிஷ்ட மூர்த்திம் ஹயசிரஸ உபாராதயந்தீ நிசம்ய
ஸ்ரீ பாஷ்யம் லக்ஷ்மணாய ஸ்வடதி விதித யத்யாக்ருதிம் பிப்ரதே Zதாத்॥ 28

வாகீசானஸ்ய மந்த்ரம் ச்ருதி சிகர குரு : தார்க்ஷ்ய லப்தம் ஜபித்வா
தத்கால ப்ராப்த லாலாம்ருதம் அபிபதஹீந்த்ராக்ய பூர்யாம் யதீந்தோ :।
மாது : ப்ராது: தநூஜோத்தம குண குருகாதீச வம்ச்யார்சிதாம் தந்
மூர்த்திம் ஸம்ப்ராப்ய காஞ்ச்யாம் ஸ்வயமபி சிரமாராதயத் பக்திபூம்னா॥ 29

காலே வேதாந்த ஸூரி : ஸ்வபதமுபகதம் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரம்
சிஷ்யாக்ர்யம் மூர்த்திமேனாம் ஸமனயதத தத் சாத்ர பாரம்பரீத :।
ஸேயம் வாகீச மூர்த்தி: குருவர பரகாலாதிபி : ஸேவ்யமானா
ரம்யாஸ்தான்யாம் த்ரிகாலம் விலஸதி விஹிதார்சா அத்ய கர்ணாடதேசே॥ 30

தர்மம் பூர்வாச்ரமோக்தம் ஸுகரமபி ந க்ருத்வாந்திமோக்தஸ்ய தஸ்ய
அனுஷ்டானே Zசக்திபீதம் ஹயமுக க்ருபணம் லம்பயித்வாச்ரமம் தம்।
சோபோத்ரேகாதினார்சாவிசய உபகதே லக்ஷ(கோழ) பூஜாம் துலஸ்யா
ஸ்வோபாக்யா வ்யாக்ருதிம் சாகலயஸி கியதீ மய்யநர்கா தயா தே॥ 31

இத்தம் வாகீச பாதாயுகல ஸதத ஸம்ஸேவநார்சாதி தீக்ஷ:
தத்ரைதாம் நவ்ய ரங்கேச்வர யதி : அனகாம் அர்பயத் ரத்னமாலாம்।
ஏனாம் நித்யம் படந்தோ புவி மனுஜவரா பக்தி பூம்னேப்ஸிதார்த்தான்
ஸர்வாந் விந்தந்தி வாஹானனவர கருணாபாங்க தாராபிஷேகாத்॥ 32

ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ ரத்னமாலா ஸ்தோத்திரம் முற்றும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம :

ஸ்ரீமத் பரகால மடாதிபதி (33) ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதன பாதுகாஸேவக

ஸ்ரீமத் அபிநவ ரங்கநாத ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிய

## ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதன ரத்னமாலா ஸ்தோத்ரம்

***கருத்துரை எழுதியவர் :*** மஹாமஹோபாத்யாய - அபிநவ நாகேச, பையம்பாடி, சேட்டலூர். **வா. ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி,**
பிரன்ச் இன்ஸ்டிட்யூட், பாண்டிச்சேரி - 605 001.

1. வேதங்களிலும், ஸ்ம்ருதி இதிஹாஸங்களிலும் மிகவும் புகழ்ந்து கூறப்பட்ட ஸ்ரீ பரவாஸுதேவனின் அவதாரமான வாக்தேவதையான ஸ்ரீஹயக்ரீவர் அடியேன் மனதில் எப்போதும் ப்ரகாசிக்கட்டும். இந்த லக்ஷ்மிஹயக்ரீவருடைய அநுக்ரஹத்தால் உலகில் மனிதர்கள் பேசுகின்றனர். மேலும் கவிதார்க்கிக ஸிம்ஹம், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் - என்றவாறெல்லாம் பிருதம் பெற்ற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும் இந்த ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரின் அருளாலேயே மிகவும் புகழுடன் ஆச்சர்யமான திறமையுடன் விளங்கினார்.

2. அநிருத்தராய் வியூஹாவதாரம் கொண்டிருந்தபோது இந்த ஸ்ரீ ஹயக்கிரீவர் தமது திருஉந்தியிலே ஸத்துவகுணம் மேலோங்கிய பிரமனைப் படைத்தார். கூடவே ராஜஸனான ரஜோகுணம் மேலிட்ட கைடபன், தாமோகுணம் மேலோங்கிய மது என்ற இரு அசுரர்களையும் நீர்த்துளிகளின் மூலம் உண்டாக்கினார். அவ்விருவரும் பிரமனிடமிருந்து வேதச்சுவடிகளைப் பறித்துச் சென்றனர். ஸ்ரீஹயக்ரீவர் அவ்விருவரையும் துடை இடையில் வைத்து நெருக்கிக் கொன்று வேதங்களை மீட்டுப் பிரமனுக்கு அளித்தார். ஸ்ரீபாஞ்சராத்ரநூல்களையும் அருளினார். அத்தகைய லக்ஷ்மிஹயக்ரீவர் அடியேன் மனதில் எப்போதும் ப்ரகாசிக்க வேண்டும்.

3. இந்த ஸ்ரீ ஹயக்ரீவரின் மடியில் உயர்ந்த வாக் தேவதை என்னப்பட்ட ஸ்ரீலக்ஷ்மி என்றும் இருந்து வருகிறாள். ஐதரேயோபநிஷத் என்ற உபநிஷத்தில் கடைசிக்கு முந்தின கண்டத்தில் இது விளங்கும். இவள் தனது திருக்கையில் வீணையை வைத்துள்ளாள். இவளையும், இவளது கையிலுள்ள வீணையையும் யார் மனதில் நினைக்கின்றாரோ அவர் பெரும் புகழ் அடைவார். அத்தகைய ஸ்ரீவாக்தேவதை அடியேன் மனதில் என்றும் இருந்து அடியேனை நல்ல வார்த்தைகளைப் பேச வைக்கவேண்டும்.

4. க்ருஷ்ணம் நியானம் (ரிக் 1-164-47) என்ற ருக்வேத மந்திரத்தால் கூறப்பட்ட விஷ்ணு ஒருவரே உலகைப் படைத்தவர். அவரே வேதங்களைப் பிரமனுக்கு அருளியவர். எல்லாவற்றையும் விட மேலானவராக ஐதரேயத்திலும், ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் இப்படியே கூறப்பட்டது. உலகிலிருப்பவர்களுக்குப் பிராணவாயுவைப் போன்றவரும், வாக்தேவியால் அணைத்துக்கொள்ளப்பட்ட வருமான இந்த ஸ்ரீஹயக்ரீவரை எப்போதும் மனதில் எண்ணி வருகிறோம். மற்றையோரைப்பற்றி எதற்கு வீணாய் எண்ணுவது.

5. ஆச்வலாயனரால் தெரிவிக்கப்பட்ட தசச்லோகீ என்று ப்ரஸித்தமான துதி நூல் ஒன்று உண்டு. அதில் வேதங்களில் தெரிவிக்கப்பட்ட வாக்தேவதை ஸ்ரீ ஹயக்ரீவரின் சக்தியாக (=மனைவியாக) தெரியவருகிறது. மற்றையோர் இல்லை. அர்த்தம் வை பத்நீ என்று வேதம் காட்டியபடி இந்த வாக்தேவதை ஸ்ரீஹயக்ரீவரின் மனைவியான லக்ஷ்மி தேவியே. பிரமனின் மனைவியாகவும், ஸரஸ்வதி என்ற நதி உருவில் உள்ளவளும் இந்த ஸ்ரீஹயக்ரீவபத்நீயான வாக்தேவியின் 16ல் ஒரு பங்கு ஆகும். ப்ரம்ஹ வைவர்த்த புராணத்தில் இது தெரியவரும்.

6. நைஷதம் என்பதாக நளசரித்ரத்தை ஒரு காவ்யமாக எழுதிய ஸ்ரீஹர்ஷன் என்ற கவி ஸரஸ்வதியை விஷ்ணுவின் பத்னியாகவும், ஸ்ரீவிஷ்ணுவின் அருகில் அர்ச்சாரூபத்தில் உறைவதாகவும் கூறுகிறான். அத்துடன் இது புராணங்களில் ப்ரஸித்தம் என்றும் சொல்கிறான். ரிக்வேதத்தைப் பிரவர்த்திப்பித்தவரான ஸ்ரீசௌனகர் - அறிவு, நல்ல வாக்குஸித்தி இவற்றை விரும்புபவர் காலை வேளையில் ஜபிக்கவேண்டியதாக இந்த வாக்ஸூக்தத்தை குறிப்பிடுகிறார். இவளை எண்ணிவருபவர்களுக்கு அறிவு மேன்மேலும் வளரும்.

7. ரிக்வேதத்தில் வாகம்ப்ருணீஸூக்தம் என்ற பகுதியில் அளவற்ற பெருமைகளை உடையவராக இந்த வாக்தேவீ தெரிவிக்கப்பட்டாள். அதற்கு முந்தினஸூக்தத்தில் ஸ்ரீஹயக்ரீவன் ஹம்ஸ : பரமஹம்ஸர் என்று பெருமைப்படுத்தப்பட்டவர்.

ஸாமவேதத்து ஆரண்யகத்திலும் இவ்விருவரும் இதேபோன்று சேர்ந்து அநுஸந்திக்கப்பட்டனர். ஆக ஜ்ஞானிகள் தங்களது வேள்வி முதலிய கர்மங்களால் ஆராதிக்கவேண்டியவர்கள் இவ்விருவருமே.

8. வ்ருத்ராஸுரனைக் கொல்ல முயன்ற இந்த்ரன், அடியேனுக்கு உற்ற தோழனான ஸ்ரீ விஷ்ணுவே! அடியேனுக்கு இவனைக் கொல்லக்கூடிய வலிமையை அருள்வீராக என்று வேண்டிக்கொண்டு விருத்ரனைக்கொன்றான். பிறகு அவனைக் கொன்றதாலான பாவம் தீர, கீழ்க்கூறியபடி இரண்டு ஸுக்தங்களால் எம்பெருமானுக்கு ஹோமம் செய்து உய்வு பெற்றான். இப்படி தலைப்பகுதியில் கந்தர்வர் = குதிரையானவரும், தேவர்களுக்குப் பெயரிட்டு வழங்கச்செய்தவருமான வாசஸ்பதி என்னப்பட்ட அந்த ஸ்ரீஹயக்ரீவர் அடியேன் மனதில் உறுதிபட எழுந்தருளியிருக்கவேண்டும்.

9. அதர்வண வேதத்தில் முதலில் படிக்கப்பட்ட த்ரிஷப்தீயஸுக்தம் என்பது ஒன்று உண்டு. இது படித்ததை மறக்காமலிருக்கவும், நற்பிறவி எடுக்கவும் பயன்படக்கூடியது என்று கௌசிகர் என்ற முனிவர் தாம் இயற்றிய சூத்திரத்தில் சொன்னார். ஆகவே, ஸ்ரீ ஹயக்ரீவரே! நல்லமேதையை விரும்புமவன் எல்லாவுலகுக்கும் தலைவரானவரும் வாசஸ்பதியுமான தேவரீரைத் தியானிப்பானாகில் அவன் கற்றகல்விகள் யாவும் மறக்காமலும், அவன் ஒருவராலும் வெல்ல முடியாதவனுமாக ஆவான்.

10. உருவம், பெயர் – இவற்றைக் கொண்ட ஒரு பொருளும் ப்ரளயகாலத்தில் இல்லை. கமலா என்னப்பட்ட பெரிய பிராட்டியுடன் கூடிய அந்த பகவான் ஒருவரே அப்போது இருந்தார். அந்த இருவரையும் விட மேலான எந்த ஒரு பொருளும் அப்போது இல்லை. ஒரே இருளால் சூழப்பட்டு ஜ்ஞானஸ்வரூபனான பகவான் ஒருவராலும் உணரமுடியாத நிலையில் இருந்தார். அவரை யார் அறியமுடியும்? உலகிற்கெல்லாம் உபாதான காரணம் – நிமித்த காரணம் என்ற இருவகைக் காரணமானவரும், ரஜஸ் – தமஸ் கலந்த ஸத்துவகுணம் அற்று – சுத்த ஸத்துவகுண ஸ்வரூபமானவரும், வாஸுதேவன் – என்ற வ்யூஹத்தைச் சேர்ந்தவராகவும், பகன் என்ற பெயருள்ளவராகவும் தைத்திரீய வேதமோதுமவர்கள் யாரைக் குறிப்பிடுகின்றனரோ, ஸ்ரீஹயக்ரீவரே! அப்படி பூஜிக்கப்பட்டவர் தேவரீரே அன்றோ.



11. ஸ்ரீஹயக்ரீவரே! ரிக்வேதிகள் ஐந்தாவதான ஸுக்தத்தில் காலையில் தொழவேண்டிய பகன் என்ற திருநாமத்துடன் தேவரீரை ஓதினர். எட்டாவதான, நாஸத் என்ற ஸுக்தத்தில் முன்போன்றே – தைத்திரீயர்களைப் போன்று ஓதினர். ஸ்ரீ பராசரரின் குமாரரான ஸ்ரீ வேதவ்யாஸர் – இதே கருத்தில் தேவரீரை ஸ்ரீஹயக்ரீவாவதாரமாகக் கூறுகிறார். ஆதர்வண வேதத்து ஸுத்ரகாரரான கௌசிகர், நல்ல அறிவு வளர காலை வேளையில் ஆராதிக்க வேண்டிய பகன் என்ற திருநாமத்துடன் தேவரீரைப் பணித்தார். ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதையும் இப்படியே நன்கு கூறிற்று.

12. பரிமுகக் கடவுளே! வாஸுதேவ – ஸங்கர்ஷண ப்ரத்யும்னர்கள் என்பதாக மூன்று ஒளிவீசிவரும் திருமேனியுடன் வ்யூஹங்களில் முதலில் ஸ்வரூபமாகத் தோன்றியதாக ரிக்விதானம் என்ற நூலில் ஸ்ரீசௌனகர் முதலானோர் கூறினர். வேள்வியே உருப்பெற்றது போன்ற தேவரீர் திருமேனியைக் குறித்து ஹோமம் செய்து ஜிதம்தே என்ற துதியை தினமும் ஓதி வருகின்றனர். இப்படி த்ரிபாத் ஏகபாதம் என்றவாறு புருஷ ஸுக்தத்தில் தெரிவிக்கப்பட்டவர் தேவரீரே. ஒப்பற்றவரும் எல்லா வேதங்களிலும் ஓதப்பட்டவரும் தேவரீரே என்றனர் ஆப்தர்கள்.

13. பலவகைப்பட்ட வேதங்களிலும் சான்றோர்கள் எந்த ஸ்ரீஹயக்ரீவர் ஒருவரையே அடைந்து உய்வு பெற்றனரோ, எவர் ஒருவரே எல்லாப் பொருள்களுக்கும் உள்ளும் புறமும் பரவி விரவி நின்று கட்டுப்படுத்தும் திறன் கொண்டவரோ, கடலில் யார் ஒருவர் பத்து உருக்களுடன் (விபவாவதாரங்களுக்குத் திருப்பாற்கடல் மூலம் ஆனபடியால் இப்படி அருளியது) ஸஞ்சாரம் பண்ணுகிறாரோ, இத்தகையவரைப் பிரமன் ஒருவரே ஓரளவுக்கு அறிந்தாரோ, யார் சந்திர மண்டலத்தின் நடுவே எழுந்தருளியிருக்கிறாரோ, கூடவே இருந்தும், அருகிலேயே உள்ள எந்த இவரை தேவர்களும் அறியவில்லையோ, அத்தகைய வாசஸ்பதி வாக்குக்குத் தலைவனான ஸ்ரீஹயக்ரீவர் அடியேனைக் காத்தருள வேண்டும்.

14. எவரிடமிருந்து பிரமன், சிவன், முதலானோரும், இவ்வுலகம் யாவும் தோன்றினதோ, யார் இந்த எல்லா வகைப் பொருட்களையும் உள்ளும் வெளியும் பரவி நின்றுத் தாங்குகின்றாரோ, எவரிடம் ப்ரளயகாலத்தில் இவையாவும் ஒடுங்குகின்றனவோ, யார் நான்கு வேதங்களே உருவானவரோ, அத்தகைய ஸ்ரீவிஷ்ணு, நாராயணன், என்பதாய் திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தில் அறியப்படுகிறார். அவரே அதர்வவேதத்து உபநிஷத்தில் ப்ரம்ஹண்யோம் தேவகீபுத்ரோம்

ப்ரம்ஹண்யோம் மதுஸூதநோம். (இவனே வேதங்களுக்கு ஹிதத்தைச் செய்பவர். ஓங்காரத்தால் ஓதப்படுமவர், இவரே தேவகியின் திருமகனாய் அவதரித்தவர், இவரே மது என்ற அஸுரனை மாய்த்த ஸ்ரீஹயக்ரீவன்) என்பதாய் அறியப்படுகிறார். அத்தகைய ஸ்ரீஹயக்ரீவர் அடியேனை ஒளியுடன் இருக்க அருள்வாராக.

15. எம்பெருமானுக்கு இயல்பாகவே பேரறிவு, தாங்கும் திறன், நல்லனவற்றை முடிக்கும் திறமை, எதையும் ஆட்டிப்படைக்கும் சக்தி முதலான குணங்கள் உண்டு. இவை ஒவ்வொன்றும் இயல்பானவை, மற்றைய ஒருவருக்கும் அமையாதவை, மிகவும் உயர்ந்த தரத்தைச் சேர்ந்தவை, பலவகையானவை என்பதாக ச்வேதாச்வதர உபநிஷத்தில் தெரிவிக்கப்பட்டது. அந்த பரமாத்மா வாஸுதேவனே. இவனையே மற்றைய வேதங்களில் ஹம்ஸன் என்றது . இவர் பிரமனைத் தனது நாபீகமலத்தில் படைத்து அவருக்கு மிக உயர்ந்த வேதங்களை அருளினார். இவரே நம்மை மோக்ஷம் அடைவிக்க பாலம் போன்றவர். இவரையே மோக்ஷம் செல்ல விரும்பும் அடியேன் சரணமாகப் பற்றுகிறேன்.

16. ப்ரவர்க்யார்த்தவாதம் என்ற வேதப்பகுதியில் ஒரு கதை வருகிறது. விஷ்ணுவின் கையில் உள்ள வில்லின் நாண்கயிற்றை வம்ரிகள் - செல்லு, கரையான், அரித்தன. அதனால் அந்த நாண் கயிறு அறுந்தது. அந்த யஜமானஸ்வரூபனான விஷ்ணுவின் தலை வில்லின் நுனியால் வெட்டப்பட்டது. என்று அங்கு உள்ள கதை. இங்கு எம்பெருமான் விஷ்ணு குறிப்பிடப்படவில்லை. ஹரியைப் பூஜிக்கும் அந்தணனை 'அர்ச்சகஸ்து ஹரி : ஸாக்ஷாத்' என்றது போல் வேள்வியைச் செய்யும் யஜமானனையே விஷ்ணுவாகக் கூறிற்று வேதம். யஜமானனின் நாண் கயிற்றை நாங்கள் அறுபடும்படிச் செய்ய வரம் வேண்டும் என்று கரையான் வேண்டினவரத்தால் இப்படி நேர்ந்தது. விரும்பி அவை இதைச் செய்யவில்லை. இதனை வேதங்களைக்கொண்டும், ஸ்ரீ ஹரிவம்சம் என்ற இதிஹாசத்தைக் கொண்டும், யுக்தியாலும் சான்றோர்கள் நிலைநாட்டினர். இந்த யஜமானனை விஷ்ணுவாகக் கூறியது கௌணப்ராதுர்ப்பாவம் - அதாவது முக்கியமான ஸ்ரீவிஷ்ணுவின் அவதாரமில்லை. ஸ்பர்த்தமானோ விஷ்ணுரேவ பூத்வா இமாந் லோகாந் அபி ஜயதி (வாமனரான ஸ்ரீவிஷ்ணுவைக்குறித்து போட்டிகளின் நானே வெல்லவேண்டும் என்ற விருப்பமுள்ளவன் வெள்ளாட்டைக் கொண்டு ஒரு வேள்வியைச் செய்யக்கடவன், இவன் விஷ்ணுவாகவே ஆகி இந்த உலகங்களை



வெல்வான்) என்றவிடத்தில் போல் - ஒப்புமையால் வந்த உருவம். ஸ்ரீ ஹயக்ரீவரே! தேவரீர் ஸூர்யமண்டலத்தின் நடுவில் வீற்றிருந்து விச்வாமித்ரரின் பேரனான ஸ்ரீ யாஜ்ஞவல்க்ய முனிவருக்கு பழுதற்ற சுக்லயஜுர்வேதத்தைக் குதிரை முகமாய் எழுந்தருளி உபதேசித்தருளினீர். இது வேதமறிந்தவர்களான முனிவர்களின் வாக்குகளால் அறியப்படும். எல்லாவகையான வேதங்களிலும் தெள்ளிய அறிவை வழங்கும் வாக்தேவியை மோக்ஷதர்மத்தில் முனிகளில் சிறந்த ஸ்ரீ வேதவ்யாஸர் அருளினார். ஏன்? எனில் அவர் அந்த வாக்தேவியின் அருளால் பெருமைகளை அடைந்தவர். அந்த வாக்தேவி தேவரீரின் சக்தியே என்று ப்ரம்ஹவைவர்த்த புராணத்தால் அறியப்படும்.

18. ஆகவே, ஸ்ரீஹயவதனப் பெருமாளே! அந்த சுக்லயஜுர் வேதத்திலும் ஸம்ஹிதாபாகம் ப்ரஹதாரண்யக பாகம் என்ற பகுதிகளிலும் தேவரீர் அந்த வாக்தேவியுடன் கூடி ஆதியில் இருவராய் நின்று உலகைப்படைப்பதும், எல்லா வேதங்களையும் அருள்பவராகவும், அந்த ப்ரம்ஹாவைக் கொண்டு வ்யஷ்டி ஸ்ருஷ்டி = இந்த மிகுந்த உலகப்படைப்பை நடத்துவதாகவும் அறிகிறோம். பிரமன் செய்த வேள்வியால் மகிழ்ந்து அவரால் ஆராதிக்கப்பட்டு அவருக்கு வரங்களை தேவரீர் அருள்வதாகவும் உணர்கிறோம்.

19. ஸ்ரீஹயவதனனே! ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் நாலாவது அத்யாயத்தில் இரண்டாவதாக சிசு ப்ராம்ஹணம் என்ற பகுதி உள்ளது. அதில் ப்ராணன், ஸ்தூணா (தூண்) சிறுகுழந்தை, மேல் தட்டையாகவும் கீழே ஓட்டை உள்ளதுமான சமஸம் என்ற ஸோமபானம் செய்யும் பாத்ரமாகவும் உருவகப்படுத்தி ஸ்ரீஹயக்ரீவனின் நான்கு வ்யூஹங்களைப்பற்றி கூறுகிறது. மேலும் மாந்தரைத் தீய வழியில் தள்ளிக் கெடுதிகளை உண்டு பண்ணும் ஏழு இந்த்ரியங்களையும் வெல்வதற்காக வாக்தேவியுடன் கூடியவராகி பக்தர்களின் தொல்லைகளை நீக்குபவராக தேவரீரைக் காட்டுகிறது.

20. ஸ்ரீஹயக்ரீவனே! அச்வினீ தேவதைகள் ஏற்படுத்திக் கொடுத்த குதிரை முகத்தைத் தாங்குவதால் ஆதர்வணரான ததீசீ என்ற முனிவர் குதிரை முகம் கொண்டார். ததீசியாலும் அச்வினீதேவர்களாலும் ப்ரவர்க்யத்தின் உண்மையான நிலை தெளிவாய் உபதேசிக்கப்பட்டது. இப்படி உண்மை இருக்க, கலியின் கோலாஹலத்தால் சில தாமஸர்கள் - சக்தி என்ற துர்தேவதைக்கு அதீனமானது

ஹயக்ரீவரின் தலை என்கின்றனர். தாய் வயிற்றிலிருந்து இப்புவியில் விழும்போது மதுஸூதனரான ஸ்ரீஹயக்ரீவரின் கடாக்ஷத்துக்குப் பாத்ரமானவர்களே ஸாத்துவிகர்கள், அவர்களே மோக்ஷம் செல்லும் எண்ணமுள்ளவர்களாவார்கள் என்ற ஸ்ரீ வேதவ்யாஸரின் கூற்றுப்படிக்கு இப்படி உண்மையை மாறாட்டிக் கூறுமவர்கள் தாமஸர்களே.

21. அதர்வாவின் குமாரரான ததீசி என்ற முனிவர், ப்ருஹதாரண்யகத்தில் முதல்காண்டத்தில் ப்ரவர்க்யத்தின் உண்மை நிலையைக் கூறினார். சதபதப்ராம்ஹணத்தில் தீக்ஷணீயார்த்தவாதம் என்ற பகுதியில் ஸ்ரீவிஷ்ணுவே உயர்ந்த தத்துவம் என்றும் அவர் கூறினார். உபநிஷத்தில் மூன்றாம் காண்டத்தில் பரம்பொருள் வாக்தேவதையான ஸ்ரீஹயக்ரீவனே என்று தெரிவிக்கப்பட்டது. மீண்டும் அவரே நான்காவதான மதுப்ராம்ஹணத்திலும் இதனையே கூறினார்.

22. வாக்தேவியுடன் கூடிய அநிருத்தனாகிய குதிரைமுகம் கொண்ட ஸ்ரீ வாஸுதேவனே எல்லா உலகையும் படைப்பவர் என்றும், அவரே மிகவும் உயர்ந்த தத்துவம் என்றும் மதுப்ராம்ஹணம் நிலைநாட்டியது. அச்வினீ தேவர்களுக்கு வேண்டியவரும், மது, த்வாஷ்ட்ரன் இவர்களின் நிலையை அறிவிப்பவரும் அதர்வாவின் குமாரருமான ததீசி முனிவர் இந்த உண்மையை அறிவார் என்பதாக ஹே வாகீச்வரனே! தேவரீரையே மங்களகரமான திருமேனியை உடையவராகவும் மேற்படி மது ப்ராம்ஹணம் தெரிவித்தது. ஹே ஹயவதனப்பெருமானே! ஆதர்வணரான ததீசி முனிவர் எந்த மதுப்ராம்மணத்தைக்கண்டு வெளியிட்டாரோ அதுவே ஸாத்துவிகாக்ரேஸர்களால் ஸ்ரீநாராயண கவசம் என்று கோஷிக்கப்படுகிறது. இதைக்கொண்டே இந்த்ரன் வ்ருத்ரனைக் கொன்றான். வ்ருத்ரனைக் கொல்ல இது போதும். இதுவே ப்ரம்ஹவித்யை. எம்பெருமானே! தேவரீரின் கருணைக்கு இலக்காகாத வேதபாஹ்யர்கள் இதை அறியார்.

24. தைத்திரீயத்தில் மஹாநாராயணீயோபநிஷத்தில் தெரிவித்த பரதத்துவமான ஸ்ரீமந்நாராயணனையே ஸ்ரீபாஞ்சராத்ரம் முதலான ஆகமங்களும் விளக்குகின்றன. இதனையே முனிவருள் சிறந்தவரான ஸ்ரீவேதவ்யாஸர் ஸ்ரீமஹாபாரதத்தில் திருநாராயணீயம் என்ற பகுதியில் மோக்ஷதர்மத்தில் வெளியிட்டார். ஸ்ரீ கீதையில் உள்ள கருத்துக்களைச் சுருக்கிக் காட்டத் திருவுள்ளப்பட்டு அவரே பாரதத்தில் ஸ்ரீக்ருஷ்ணனே ஸ்ரீ ஹயக்ரீவர் என்னும்



வேதாந்தக் கருத்தை பரமைகாந்திகளின் தர்மங்களை விளக்கும்போது ஆச்வமேதிகபர்வத்தில் ஸ்ரீவைஷ்ணவதர்மசாஸ்திரத்தில் நிலைநாட்டினார்.

25. ஹயக்ரீவரே! உபநிஷத்தில் முதலில் நாராயணனைக்கூறி அவரையே முடிவில் ப்ரம்ஹண்யோம் மதுஸூதநோம் வேதங்களைக்காப்பவரும் ப்ரணவத்தால் த்யானிக்கப்படுபவருமான அந்த நாராயணனே தேவகீபுத்ரர், அவரே மதுவைக் கொன்ற ஹயக்ரீவர் என்று தெரிவித்தது. மோக்ஷதர்மபர்வத்திலும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா இதே கருத்தை வெளியிட்டருளினார். இதையெல்லாம் நன்கு உணர்ந்து யோகியான ஸ்ரீ கலியன் என்ற திருமங்கை மன்னன்.

" வசையில் நான்மறை கெடுத்த அம்மலரயற்கு அருளி முன் பரிமுகமாய் இசைகொள் வேதநூல் என்று இவை பயந்தவனே எனக்கு அருள் புரியே" (பெரியதிருமொழி 5-3-2 திருவெள்ளறைப் பாசுரம்) என்றும், மேலும் பெரிய திருமொழி 7ம் பத்தில் "முன் இவ்வுலகேழும் இருள்மண்டியுண்ண முனிவரோடு தானவர்கள் திகைப்ப - வந்து பன்னுகலை நாவ் வேதப் பொருளையெல்லாம்

பரிமுகமாய் அருளிய என் பரமன் காண்மின்" (7-8-2) என்று திருவழுந்தூர்பாசுரத்திலும் ஸ்ரீ ஹயக்ரீவப்பெருமானைக்குறித்து அருளினார். இதேபோன்று ப்ரபன்ன ஸந்தான கூடஸ்த்தரான ஸ்ரீநம்மாழ்வாரும் தமது திருவாய் மொழியில் (2-8-5)

"ஓவாத் துயர்ப்பிறவி உட்பட மற்றெவ்வெவையும்
மூவாத் தனிமுதலாய் மூவுலகும் காவலோன்
மாவாகி ஆமையாய் மீனாகி மானிடமாம்
தேவாதி தேவபெருமான் என் தீர்த்தனே" என்றருளினார். இதில்
மற்றைய அவதாரங்களுக்கு முன்பாக மாவாகி என்று ஸ்ரீஹயக்ரீவரைக் கூறியது கவனிக்கத் தக்கது.

26. ஸ்ரீ ஹயக்ரீவப்பெருமானே! உலகு முதலானவற்றைப்படைத்தல்- காத்தல் அழித்தல் இவற்றிற்கெல்லாம் ஒரு தேவனே காரணம் என சில வேதவாக்யங்கள் கூறின. மற்றும் சில வேதவாக்யங்கள் யாரோ ஒரு தேவியே காரணம் என்று தெரிவித்தன. ஒரு மிதுனமே - தேவனும் தேவியுமான இருவருமே காரணம் என்பதே வேதாந்தங்களால் அறியப்படும். அந்த இருவரும் பெரிய பிராட்டியாரும், எம்பெருமானுமே - என்பதாகவும், சேதனன் அசேதனம் இந்த இரண்டோடும்

பிரித்துப்பார்க்க முடியாத ஸ்ரீமந்நாராயணனே காரணம் என்பதாக மோக்ஷதர்மத்தில் எம்பெருமானின் அவதாரம் நடவடிக்கை முதலானற்றைக் காட்டி ஸ்ரீவேதவ்யாஸர் விளக்கியருளினார்.

27. ஸ்ரீஹயக்ரீவப்பெருமானே! ஆவணி மாதத்தில் திருவோண நக்ஷத்ரத்தில் வேதங்களைப் பாதுகாக்க தேவரீர் அவதாரம், ஆனது பற்றி ரிக்வேதிகள் அன்று ச்ராவணத்தன்று ரிக்வேதத்தை அத்யயனம் செய்யத் தொடங்குகின்றனர். அதே ஆவணியில் பூர்ணிமையில் யஜுர்வேதம் உபதேசிக்கப்பட்டது தேவரீரால் என்பது பற்றி யஜுர்வேதிகள் ச்ராவண பூர்ணிமையில் தங்கள் வேதத்தைத் தொடங்குகின்றனர். இப்படி எல்லோரும் ஸ்ரீஹயக்ரீவரது தொடர்பைக் கொண்டே வேதாரம்பம் செய்கின்றனர்.

28. ஸ்ரீஹயக்ரீவப்பெருமானே! ஸ்ரீவிஷ்ணுவின் பத்னீயே பரா வாக் என்னப்பட்டவள் என்பதாக எந்த ஸரஸ்வதீ (=பிரமனின் மனைவி) பஹுமானத்துடன் பூஜித்துவருகிறாளோ அந்த பரா வாக் என்னப்பட்ட ஸ்ரீலக்ஷ்மிதேவியின் மணாளரான ஸ்ரீஹயக்ரீவன் அன்றோ நம் கணவருக்கு வேதங்களையும் ஸ்ரீபாஞ்சராத்ரங்களையும் உபதேசித்தருளினார் என்று மிகவும் ஆதரவுடன் அந்த வாக்தேவியால் ஆலிங்கனம் செய்துக்கொள்ளப்பட்ட ஸ்ரீலக்ஷ்மிஹயக்ரீவரின் உருவை தினமும் ஆராதித்து வருவதுடன், அந்த ஸ்ரீஹயக்ரீவர் எடுத்த ஹம்ஸ பரமஹம்ஸ தத்தாத்ரேய அவதாரங்களில் ஸேவை ஸாதித்தைப் போன்று சிகை, யஜ்ஞோபவீதம், த்ரிதண்டம் இவற்றுடன் ஸேவையாகும் ஸ்ரீபகவத் ராமாநுஜரைக்கண்டு, "இவர் ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமே, இவர் அருளிய ப்ரம்ஹ ஸூத்ரபாஷ்யமே உலகில் ஸ்ரீபாஷ்யம் என வழங்கக்கடவது" என்று அருளினார்.

29.ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் என்ற நம் தூப்புல்வள்ளலும் திருவஹீந்திரபுரத்தில் ஔஷதகிரியில் ஸ்ரீஹயக்ரீவன் ஸந்நிதியில் கருத்மானிடமிருந்து ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தைப்பெற்று ஸ்ரீ ஹயக்ரீவனைத் தியானித்தபோது, அவர் நேரில் எழுந்தருளி ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கு ஸேவைஸாதித்துத் தமது லாலாம்ருதத்தை அவருக்கு அருளினார். ஸ்ரீபாஷ்யகாரரின் அம்மான் குமாரரான ஸ்ரீ திருக்குருகைப்பிரான் பிள்ளானால் ஆராதிக்கப்பட்ட அந்த ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியை (திருமேனியை) தாம் பெற்று அந்த




எம்பெருமானிடமுள்ள பக்தியால் ஸ்ரீகாஞ்சியில் வெகுகாலம் ஆராதித்து வந்தார்.

30. அந்த ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும் தமது சீடர்களில் தலை சிறந்து தமது திருவடிகளை ஆச்ரயித்த ஸ்ரீப்ரம்ஹதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமிக்கு அந்த ஸ்ரீஹயக்ரீவ மூர்த்தியை அநுக்ரஹித்தார். பிறகு அவர் சிஷ்யர்கள் என்ற முறையில் ஸ்ரீபரகாலமடத்தில் திவ்யாஸ்த்தானத்தில் அந்த ஸ்ரீ மூர்த்தி இன்றளவும் கர்ணாடக தேசத்தில் யதீச்வரர்களால் ஆராதிக்கப்பட்டு வருகிறபடி.

31. ஸ்ரீஹயவதனப் பெருமானே! அடியேனது (இந்த துதிநூலை அருளிய ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் அபிநவ ரங்கநாதப்ரம்ஹதந்த்ர பரகாலமஹா தேசிகனது) பூர்வாச்ரமத்தில் எளிய முறையில் அநுஷ்ட்டிக்கப்பாங்கான தர்மங்களை முற்றும் அநுஷ்டிக்க முடியாமல் பண்ணி, மோக்ஷாச்ரமம் என்னப்பட்ட ஸந்ந்யாஸாச்ரமத்தை அடைவித்து அருளினீர். இடையில் எனது உடலில் வெள்ளைப்பரிமுகர் போன்று வெண்மையான உடலமையும் ஒருவிதமான நோயை உண்டு பண்ணினீர். தினமும் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவனுக்கு லக்ஷம் துளஸி அர்ச்சனை செய்வது என்று ஒருகோடி அர்ச்சனை செய்ய முற்பட்டபோது அந்த நோயை முற்றிலும் நீக்கியதுடன், ஸ்ரீமஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் வரும் ஸ்ரீஹயசிரஉபாக்க்யானம் என்ற தேவரீரைப் பற்றிய பகுதிக்கு உரையிடும்படியான பாக்யத்தையும் அருளினீர். என்னே தேவரீருக்கு அடியேனிடம் கரைபுரண்ட தயை.

32. இப்படி ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரின் திவ்ய பாதுகைகளை தினமும் முறைப்படி பூஜிப்பது, துளஸி தளங்களால் அர்ச்சிப்பது, அவரையே ஸேவிப்பது இது முதலானவற்றைக் கொண்டே போது போக்கி வருபவரும் அபிநவரங்கநாத பரகாலயதீந்த்ர மஹாதேசிகன் என்ற பெயருள்ளவர் இந்த ரத்னமாலா என்ற துதி நூலை அந்த ஹயவதனனின் திருவடிகளில் ஸமர்ப்பித்தார். இதனை தினமும் படித்துவரும் மநிதச்ரேஷ்டர்கள் அவரவரது பக்திக்கு ஏற்ப விரும்பிய எல்லாப் பயன்களையும், ஸ்ரீலக்ஷ்மி ஹயவதனப்பெருமானின் திவ்யகடாக்ஷப் பெருக்கினால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களாய் கட்டாயம் பெறுவர்.

(இப்படி சுரோத்ரீயம் பையம்பாடி சேட்டலூர். வாஸுதேவ ஸ்ரீவத்ஸாங்காசார்யர் எழுதிய சுருக்கமான கருத்துரை முற்றுப்பெறும். அனேக விஷயங்களை இதில் குறிப்பிட முடியவில்லை. அவகாசம், நேரம் இல்லாததே காரணம். பிறகு ஸ்ரீஹயக்ரீவாநுக்ரஹத்தால் ஆகிறது.)

"தர்மகுப் தர்ம க்ருத் தர்மீ" என ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் வரும் திருநாமங்கள் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவனையே குறிக்கும் எனப் பெரியோர் கூறுவர். வாகீசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி: என ஸ்வாமிதேசிகன் குறிப்பிட்டதும் நமது புதுச்சேரி ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவனையே சாரும் என நினைக்குமளவுக்கு அவர் தேஜோரூபனாக, தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு நற்பலன்களையும், மனநிம்மதியையும், செழிப்பையும் வாரி வழங்கி வருகிறார். குருவாரம் எனப்படும் வியாழக்கிழமைகளிலும் இன்னும் பல முக்கிய தினங்களிலும் பக்தர்கள் குடும்பத்துடன் ஸன்னிதிக்கு வந்து அவரவர் விருப்பப்படி கைங்கரியங்களைச் செய்து வருகின்றனர். மாணவர்கள் கல்வியில் மேன்மை பெறுகின்றனர். வியாபாரிகள் வியாபாரம் செழிக்கப்பெறுகின்றனர். எவரும் கோரியபயனை தட்டாது பெற்று வருகின்றனர்.

அவர் எழுந்தருளியிருக்கும் நகரம் உயர்ந்த கட்டிடங்கள் செல்வச்செழிப்பு அன்பார்ந்த பக்தர்கள் கூட்டம் இவ்வாறு கண்ணுக்கினியதாகக் காட்சி தருகிறது. ஸன்னிதி ஏற்பட்டு 32 வருடங்கள் பூர்த்தியாகும் இத்தருணத்தில் இத்திருக்கோயிலில் வேதஸ்வரூபனாகிய பெரியதிருவடி எனப்பெறும் கருடபகவானும் பிரதிஷ்டை செய்யப்படுகிறார். ஸ்ரீ கருடபகவானின் பெருமைகளை ஸ்வாமிதேசிகன் **ஸ்ரீ கருட பஞ்சாசத்திலும், ஸ்ரீ கருட தண்டகத்திலும்** விஸ்தாரமாக ஸாதிக்கிறார். லௌகீகமந்தர் கூட ஸ்ரீ கருடபகவானை அண்டி அபரிமிதமான பலன்களைப் பெறலாம். அவருக்கு ராகு காலத்தில் அபிஷேகம் ஆராதனை செய்வது ஸர்ப்பதோஷத்தைப் போக்கும். செய்வினை தீவினை சக்திகளை பறக்கடிக்கும். வியாதிகள், தொந்தரவுகள் நீங்கப்பெறும். வியாழன், ஞாயிறு கிழமைகளில் ஸ்ரீ கருடனுக்கு விசேஷமான கைங்கரியங்கள் செய்யலாம்.

ஆனி ஸ்வாதி ஸ்ரீ கருடனுக்கு திருநக்ஷத்திரம். ஆடி மாதம் கருட பஞ்சமி விசேஷித்தது. பெண்கள் ஸ்ரீ கருடனை பூஜிக்க உடன் பிறந்தவர்கள் க்ஷேமப்படுவர். அமிருதத்தைக் கொணர்ந்த ஸ்ரீ கருடன் அமுதன் உண்ட தேவர்களையும் விஞ்சிய நிலையாகிய மோக்ஷானந்தமே நமக்கு பெற்றுத்தருவார். இதர ஸாமானிய பலன்களைப் பற்றிக் கூறுவானேன்? நவக்கிரக தோஷமும் நீங்கும். அவர் திருமேனியில் 8 ஸர்ப்பங்கள் உள்ளன. அவருக்கு நெய்யில் தீபமேற்ற கிரகதோஷங்கள் விலகும். பக்தர்கள் யாவரும் ஸகலநன்மைகளையும் பெறவேண்டும். வன்முறையற்று அன்பும் அமைதியும் விளங்கும் திருநாடாக நமது புதுச்சேரி விளங்கட்டும்.

- ஸ்ரீமதி விஷ்ணுப்ரியாசாரியார்